பக்கங்கள் 23 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 19 செவ்வாய்க்கிழமை 03.03.2026 | அதிர்வு 215

## எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது!

### சபையில் ஜனாதிபதி உறுதி

இலங்கையில் எதிர்காலத்தில் எரி பொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று நாடாளுமன்றத்தில் உறுதியளித்தார். 06

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மத்திய கிழக்கு போர் பதற்றம் விரைவில் முடிவுக்கு வரட்டும்!

### உலக அமைதிக்காக நாடுகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர வலியுறுத்து

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்கள் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்பதே இலங்கை அரசின் நிலைப்பாடு என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு இன்று செவ்வாய்க்கிழமை திடீர் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, சபையில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலக அமைதிக்காக அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தற்போதைய பதற்ற நிலை உலகப் பொருளாதாரத்துக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்றும் கவலை வெளியிட்டார். 06

# ஈரான் மீதான தொடர் தாக்குதல் ஐ.நா. சாசனத்தை மீறும் செயல்!

### நாடாளுமன்றத்தில் சஜித் கடும் கண்டனம்

ஈரான் மீதான தொடர் தாக்குதலானது சர்வதேச சட்டங்களையும், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தையும் அப்பட்டமாக மீறும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஈரான் மீதான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்தார். அதேவேளை ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகள் மீது ஈரான் முன்னெடுத்த தாக்குதல்களையும் தாம் கண்டிப்பதாகக் குறிப்பிட்டார்.

பிராந்தியத்தின் அமைதியைக் குலைக்கும் எந்தவொரு 06







### மத்திய கிழக்கு போர்:

# 10 இலட்சம் இலங்கையர்களின் பாதுகாப்பு பற்றி சஜித் தலைமையில் எதிரணி தீவிர ஆலோசனை!

## பொருளாதார சவால்களை முறியடிக்கவும் திட்டம்

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழல் காரணமாக இலங்கைக்கு ஏற்படவுள்ள சவால்கள் குறித்து ஆராயும் நோக்கில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற வளாகத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

### 10 இலட்சம் தொழிலாளர்களின் பாதுகாப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது பணிபுரிந்து வரும் சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்களின் உயிர் பாதுகாப்பு குறித்து இக்கூட்டத்தில் மிகுந்த கவலை வெளியிடப்பட்டது.

போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு எவ்வாறான அவசரத் திட்டங்களை வைத்துள்ளது என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

### இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பாதிப்புகள்

இலங்கைக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையே நிலவும் வர்த்தகத் தொடர்புகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக மத்திய கிழக்கிலிருந்து பெறப்படும் மசகு எண்ணெய் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் ஏற்படக் கூடிய தடைகள், ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி மற்றும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதால் நாட்டுக்கு ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்பு என்பன குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

### அரசுக்கான அழுத்தம்

மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்கவும் அரசு அதிக அவதானம் செலுத்த வேண்டும் என இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பான எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை அரசிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மத்திய கிழக்கு நெருக்கடியானது வெறும் சர்வதேசப் பிரச்சினை மட்டுமல்ல, அது இலங்கையின் தேசியப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துடன் நேரடித் தொடர்புடையது என்பதை இக்கூட்டம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

















# தேசங்களின் இறைமை மீதான பேரிடி!

## அலி காமெனி படுகொலைக்கு ரிஷாத் கடும் கண்டனம்

ஈரான் மீதான ஆக்கிரமிப்புத் தாக்குதல்கள் மற்றும் அந்நாட்டின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி காமெனி கொல்லப்பட்டமைக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனது வன்மையான கண்டனங்களை வெளியிட்டுள்ளது. ஈரானின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்குத் தமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் என அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மக்கள் காங்கிரஸ் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

### சர்வதேச சட்டமீறல்

"அயதுல்லா அலி காமெனி கொல்லப்பட்ட செய்தி ஆழ்ந்த அதிர்ச்சியளிக்கின்றது. இது ஒரு தனிப்பட்ட தலைவரின் மரணம் மட்டுமல்ல ஒரு தேசத்தின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டின் மீது நடத்தப்பட்ட நேரடித் தாக்குதலாகும். சர்வதேச சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் மீறி இக்கொடூரம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

### மத்திய கிழக்கில் வன்முறைச் சூறாவளி

இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், மத்திய கிழக்கு பிராந்தியம் பாரிய ஸ்திரமின்மையை எதிர்நோக்கியுள்ளது. சுதந்திர தேசங்களை இல்லாதொழிப்பதற்கான அப்பட்டமான அத்துமீறல்களே இவை. இந்த அராஜகங்களை நீதிக்கு முன்னால் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

### "கபட அரசியலுக்கு" எச்சரிக்கை

ஆதரவு என்ற போர்வையில் நாடுகளின் உரிமைகளைக் களவாடும் "கபட அரசியலுக்கு" மத்திய கிழக்கு நாடுகள் மண்டியிடக் கூடாது. இறைமை அடிமைப்படுத்தப்படுவதை ஜனநாயகம் ஒருபோதும் ஏற்காது.

வன்முறைகள் மற்றும் படுகொலைகள் மூலம் ஒருபோதும் சமாதானத்தையோ அல்லது நீதியையோ அடைந்துவிட முடியாது. எனவே, மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களைப் பேச்சுகள் ஊடாகத் தீர்த்து வைப்பதையே எமது கட்சி விரும்புகின்றது. ஈரானின் ஒருமைப்பாட்டுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றோம்." – என்று ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

## மின்னேரியாவில் மும்முனை விபத்து:

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் உட்பட 10 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில்

(க.மகாதேவன்)

ஹபரணை – பொலன்னறுவை பிரதான வீதியின் மின்னேரியா பகுதியில் இடம்பெற்ற பாரிய விபத்தில் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை இன்று காலை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று, மற்றுமொரு பஸ்ஸுடனும், அதேவேளை நெல் அறுவடை இயந்திரத்தை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்துடனும் மோதியதில் இந்த மும்முனை விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்களில் பயணித்த 7 பேர் உட்பட மொத்தம் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக ஹபரணை மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தமையால், அவர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



இந்த விபத்து காரணமாக ஹபரணை – பொலன்னறுவை வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டிருந்ததுடன், பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# அரநாயக்க வைத்தியசாலையின் தாதி கத்தியால் குத்திக் கொடூரப் படுகொலை

## தகாத உறவால் விளைந்த விபரீதம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

அரநாயக்க வைத்தியசாலையில் பணியாற்றிய ஒரு பிள்ளையின் தாயான தாதி ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவரது கள்ளக் காதலனை, எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவனல்லை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அரநாயக்க, நிக்கபிட்டிய பகுதியைச் சேர்ந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணிபுரியும் 33 வயதுடைய நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் அரநாயக்க வைத்தியசாலையில் பணிபுரிந்த 35 வயதுடைய ருவினி மதுஷிகா என்ற தாதியே உயிரிழந்துள்ளார்.

பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின்படி தெரியவருவதாவது,

உயிரிழந்த பெண் தனது கணவரைப் பிரிந்து, ஏழு வயதுடைய மகனுடன் தீப்பிட்டிய பகுதியில் வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளார். இதன்போது, சந்தேகநபருடன் அவர் தகாத உறவைப் பேணி வந்தார் என்று கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7.00 மணியளவில் பணி முடிந்து வீடு திரும்பிய தாதி, சந்தேகநபர் தனது வீட்டுக்குள் இருப்பதைக் கண்டு அச்சமடைந்து, உடனடியாக அருகிலுள்ள வீட்டுக்குத் தப்பியோடியுள்ளார்.

அவரைத் துரத்திச் சென்ற சந்தேகநபர், அண்டை வீட்டு வாசலில் வைத்து அவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். தர்க்கம் முற்றிய நிலையில், சந்தேகநபர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் தாதியின் நெஞ்சுப் பகுதியில் குத்திவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

படுகாயமடைந்த பெண்ணை அக்கம் பக்கத்தினர் மீட்டு அரநாயக்க வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக அரநாயக்க பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தியுடன் சந்தேகநபர் அன்றிரவே கைது செய்யப்பட்டார்.

நேற்று திங்கட்கிழமை மதியம் மாவனல்லை பதில் நீதிவான் நிஷேதா குமாரி கருணாதிலக்க சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். உயிரிழந்த தாதியின் சடலத்தைக் கேகாலை பொது வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்து, உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கு மாறு நீதிவான் இதன்போது உத்தர விட்டார்.

# வெளிநாட்டுத் தயாரிப்பு துப்பாக்கியுடன் ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் கைது!

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12 போர் ரகத் தோட்டாக்களைப் பயன்படுத்தக்கூடிய துப்பாக்கியை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டில், ஓய்வுபெற்ற ஊனமுற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அம்பாந்தோட்டை, பல்லேமலல பகுதியில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்லைத்தீவு 9 ஆவது கெமுனு ஹேவா படையணியில் சிப்பாயாகப் பணியாற்றியவர் எனவும், அவர் கடந்த 2019ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின்போது, இந்தச் சந்தேகநபர் இதற்கு முன்னரும் கஞ்சா மற்றும் ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் ஊரடங்குச் சட்டத்தை மீறியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர் என்பது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இன்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.



# இலங்கை மலையகத் தமிழருக்கும் ‘இந்தியக் கடல் கடந்த குடியுரிமை’

## இந்தியத் தூதுவரிடம் மனோ அணி பகிரங்கக் கோரிக்கை

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், இந்திய அரசு வழங்கக்கூடிய விசேட சலுகைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தமிழ் முற்போக்குக் கூட்டணி, இந்தியத் தூதுவரிடம் முக்கிய முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர், இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் முன்வைத்த பிரதான கோரிக்கைகள் வருமாறு:-



**கடல் கடந்த இந்தியக் குடியுரிமை அந்தஸ்து**

இலங்கையில் வாழும் 15 இலட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களில் விரும்புவோருக்கு, தகுதியின் அடிப்படையில் கடல் கடந்த இந்தியக் குடியுரிமை (OCI)அந்தஸ்தை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மொரீஷியஸ் நாட்டில் இந்திய வம்சாவளியினருக்கு வழங்கப்படும் OCI கட்டமைப்பை இலங்கையிலும் நடைமுறைப்படுத்தலாம்.

1964ஆம் ஆண்டின் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் வரலாற்றை அங்கீகரிப்பதற்கும், அவர்களின் கல்வி, தொழில் மற்றும் வாழ்வாதார பாதுகாப்புக்கும் இது ஒரு “சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கையாக அமையும் என மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

**கல்வி அறக்கட்டளை மறுசீரமைப்பு**

1946 முதல் இயங்கி வரும் “இலங்கை தோட்ட தொழிலாளர் கல்வி அறக்கட்டளை“ (CEWET) என்பதை, இன்றைய சமூக மாற்றத்திற்கு ஏற்ப “இந்திய வம்சாவளி தமிழர்-சமூக மேம்பாட்டு அறக்கட்டளை (IOT-CDT)” எனப் பெயர் மாற்றம் செய்து விரிவுபடுத்த வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

இதன் கீழ் பின்வரும் திட்டங்கள் முன்மொழியப்பட்டன:

**புலமைப்பரிசில்:**

மாணவர்களுக்கான உதவித்தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

**ஆசிரியர் பயிற்சி:**

கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்காகத் தமிழ் மொழி மூலமான ஆசிரியர் பயிற்சி கல்லூரியை நிறுவுதல்.

**தாதியர் பயிற்சி:**

மலையகப் பெண்களுக்காகப் பிரத்தியேக தாதியர் பயிற்சி நிறுவனத்தை அமைத்தல்.

**சர்வதேச பள்ளிகள்:**

இந்திய நவோதயா பள்ளிகளின் முறைப்படி “இந்து சர்வதேச பள்ளிகளை“ இலங்கையில் நிறுவுதல்.

**மலையகப் பல்கலைக்கழகம்:**

நுவரேலியா மாவட்டத்தில் தமிழகப் பல்கலைக்கழகம் ஒன்றின் அங்கீகாரத்துடன் ”மலையகப் பல்கலைக்கழக வளாகத்தை” (High-Lands University Campus) உருவாக்கி, அதனைப் பிற்காலத்தில்தேசியப்பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்துதல்.


**சந்திப்பின் பின்னணி**

“இன்று 10 இலட்சம் பேர் தோட்டப் பகுதிகளில் வாழ்ந்தாலும், ஒரு இலட்சம் பேர் மட்டுமே தோட்டத் தொழிலாளர்களாக உள்ளனர். ஏனையோர் சுய முயற்சியால் பல்வேறு துறைகளில் வளர்ந்து ஒரு தேசியச் சிறுபான்மை இனமாக உருமாற்றம் அடைந்துள்ளனர். இவர்களின் தார்மீகப் பொறுப்பு இந்தியாவிற்கு உண்டு.” - என்று மனோ கணேசன் எம்.பி. இதன்போது தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் வே.இராதாகிருஷ்ணன், அரசியல் குழு உறுப்பினர் பாரத் அருள்சாமி மற்றும் இந்திய அரசியல் துறை கவுன்சிலர் ராம் பாபு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருடன் தமிழரசின் முக்கியஸ்தர்கள் இன்று சந்திப்பு!

## அரசியல் தீர்வு குறித்து விரிவான பேச்சு



நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆண்ட்ரியாஸ் கிராவிக்குக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று கொழும்பில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை, வடக்கு – கிழக்கு பகுதிகளின் நில ரம், மக்களின் வாழ்வாதார சவால்கள், ஜனநாயக செயல்முறைகள் மற்றும் நீடித்த அரசியல் தீர்வின் அவசியம் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் நீடித்து வரும் அரசின் பொறுப்புணர்வு தொடர்பான கேள்விகள், நீதியை நிலைநிறுத்தும் செயல்முறைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதை உறுதி செய்வது மற்றும் உண்மையான நல்லிணக்கம் உருவாக வேண்டிய சூழல் குறித்து விரிவாக கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

அத்துடன், அரசியல் அதிகாரப் பகிர்வு, அரசமைப்பு சீர்திருத்தங்களின் அவசியம் மற்றும் தமிழர் மக்களின் நீண்டநாள் அரசியல் உரிமைகளை மதிக்கும் வகையில் அர்த்தமுள்ள மற்றும் நிலையான தீர்வை உருவாக்குவதின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது

மேலும், நோர்வே நாட்டுடன் தொடர்ச்சியான தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தி, ஜனநாயக மதிப்புகள், மனித உரிமைகள், மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதில் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது குறித்தும் பேசப்பட்டது என்று இரா. சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

---

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ரீதியாக உருவாகியுள்ள இந்த அச்சுறுத்தல் நிலையிலிருந்து இலங்கை தனித்துச் செயற்பட முடியாது என்று தெரிவித்த அவர், எனினும் இதன் தாக்கங்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கும், இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கும் தேவையான அனைத்துத் தற்காப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு போர்ச் சூழலைச் சாட்டாக வைத்து, உள்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்குச் செயற்கையான தட்டுப்பாடுகளை உருவாக்குவதற்குச் சில தரப்பினர் முயற்சிப்பது குறித்து ஜனாதிபதி தனது அவதானத்தைப் பதிவு செய்தார். இவ்வாறான செயற்பாடுகள் அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாடுகளுடன் கைகோர்த்து, உலக சமாதானத்துக்காகத் தனது பங்களிப்பை வழங்க இலங்கை எப்போதும் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

---

## ஈரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறை நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழலால் இலங்கையின் பொருளாதாரம், அந்நியச் செலாவணி மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றில் ஏற்படவுள்ள பாரதூரமான தாக்கங்கள் குறித்து அவர் சபையில் கவலை வெளியிட்டார்.

இப்பிரச்சினையைக் கையாள்வதற்குத் தேசிய ரீதியிலான ஒருமித்த கருத்து அவசியம் எனத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ, மத்திய கிழக்கு நெருக்கடியால் இலங்கைக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க உடனடி விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும், இதற்கான அழைப்பை ஜனாதிபதி விடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கட்சி பேதங்களைக் கடந்து அனைத்து அரசியல் கட்சிகளும் இதில் பங்கேற்று, நாட்டின் நலன் கருதி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

---

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டுக்கான காரணங்கள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான அரசின் பொறிமுறைகள் குறித்து அவர் சபையில் விரிவான விளக்கமளித்தார்.

ஜனாதிபதியின் உரையில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:–

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டுக்கு, திடீரென அதிகரித்துள்ள தேவையே முக்கிய காரணமாகும். குறிப்பாக, ‘மஞ்சள் நிற’ சிலிண்டர்களைப் பயன்படுத்துவோர் ‘நீல நிற’ லிட்ரோ சிலிண்டர்களுக்கு மாற முற்பட்டதால் ஏற்பட்ட மேலதிக தேவையே இந்த நெருக்கடியைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மொத்த எரிவாயு களஞ்சியப்படுத்தும் திறன் 8,000 மெட்ரிக் டன்களாகும். லிட்ரோ நிறுவனத்துக்கு மாத்திரம் நாளொன்றுக்கு 1,000 முதல் 1,200 மெட்ரிக் டன் எரிவாயு தேவைப்படுகின்றது.

தற்போதைய களஞ்சிய வசதிகளின் படி, இருப்பு ஒரு வாரத்துக்கு மாத்திரமே போதுமானது.

நாளாந்தத் தேவை 1,800 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும் பட்சத்தில், கையிருப்பு 5 நாட்களிலேயே தீர்ந்துவிடும் அபாயம் உள்ளது.

இந்தக் களஞ்சியப்படுத்தும் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தற்போது பெரிய கப்பல்கள் மாலைதீவில் நிறுத்தப்பட்டு, அங்கிருந்து சிறிய கப்பல்கள் மூலமே தலா 8,000 மெட்ரிக் டன் எரிவாயு இலங்கைக்குக் கொண்டு வரப்படுகின்றது. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இவ்வாறான கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்து சேர்கின்றன. இருப்புகள் தீரும் வரை காத்திருக்காமல், தொடர்ச்சியாக இறக்குமதி செய்யும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய, லிட்ரோ நிறுவனம் 100,000 புதிய சிலிண்டர்களுக்கு ஓடர் வழங்கியுள்ளது. இவற்றை ஏற்றிய கப்பல் எதிர்வரும் 12ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நெருக்கடி மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கவும், சவால்களை எதிர்கொள்ளவும் அரசு முழுமையான தயார் நிலையில் இருக்கின்றது.” – என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாடசாலையில் சட்டக் கல்வி

இலங்கையின் பாடசாலைக் கல்விப் பாடத்திட்டத்தில் ‘சட்டம்’ என்ற பாடத்தை அறிமுகப்படுத்துவது குறித்த ஆலோசனைகளை வழங்குமாறு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்திற்கு கல்வி அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே சட்ட அறிவு மற்றும் அதன் முக்கியத்துவத்தை வளர்க்கும் நோக்கில், ஆரம்பக் கல்வியில் சட்டத்தை ஒரு பாடமாக அல்லது பாடம் தொடர்பான கூறுகளாக ஒரு கட்டாயப் பாடமாகவும், உயர்தரத்தில் ஒரு விருப்பப் பாடமாகவும் அறிமுகப்படுத்த வேண்டும் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கடந்த 2025 ஆம் ஆண்டு யோசனை ஒன்றை முன்மொழிந்திருந்தது.

அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாகத் தரம் 10 மற்றும் 11 வகுப்புகள் மற்றும் க.பொ.த. உயர்தரப் பிரிவுகளில் சட்டம் மற்றும் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், தண்டனைச் சட்டம் போன்றவற்றை உள்ளடக்கும் கல்விப் போதனையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான பாடத்திட்ட மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்களின் சட்ட பீடங்களின் பிரதிநிதிகள் ஆலோசனைகளுக்காக அழைக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சு உறுதி அளித்துள்ளது.

தற்போதைய 2026 ஆம் ஆண்டிற்கான சாதாரண தர பாடத்திட்டங்களில் இந்த மாற்றம் உள்வாங்கப்படவில்லை. இருப்பினும், உயர்தர புதிய பாடத்திட்ட தொகுதிகள் தயாரிக்கப்படும் போது இந்த யோசனை பரிசீலிக்கப்படும் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சத்துர கலேன தெரிவித்துள்ளார்.

நமது அடுத்த - இளம் - தலைமுறைக்கு மாணவப் பருவ காலத்திலேயே அடிப்படைச் சட்ட எண்ணக் கரு தொடர்பான தெளிவினை ஏற்படுத்துவது எதிர்காலத்தில் நாட்டில் சட்டத்தின் ஆட்சி முழு அளவில் நடைமுறையாக்கம் செய்யப்படுவதற்கும் சட்ட ரீதியாக விடயங்களை அணுகும் சட்ட ஒழுக்கமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும் கணிசமாக பங்களிக்கும்.

சட்டத்தின் ஆட்சியையும், சட்ட முறைமைகளையும், அதன் அடிப்படைகளையும் இளம் சமுதாயம் தங்கள் மாணவப் பருவத்திலேயே கற்றறிந்து கொள்ளுமாயின் முரண்பாடுகளை - நெருக்கடிகளை - சிக்கல்களை - சட்ட முறைமையில் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பும் நாட்டமும் சமூகத்தில் சாத்தியமாகும்.

பாடசாலை மட்டத்திலேயே சட்டக் கல்வியை அறிமுகப்படுத்துவது பொறுப்புள்ள மற்றும் தகவல் அறிந்த பிரஜைகளை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

பல்வேறு நாடுகள் ஏற்கனவே தங்கள் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் சட்டத்தைப் பாடமாக அறிமுகப்படுத்தியுள்ளன.

இந்த விடயத்தில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழக சட்ட பீடங்கள் அரசுக்கு - கல்வி அமைச்சுக்கு - முழு ஒத்துழைப்பு நல்க வந்திருக்கின்றமை நல்ல வாய்ப்பாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் இந்த யோசனையை மேலும் தாமதப்படுத்தாமல் விரைந்து நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும்.





# கிழக்கு அறநெறிப் பாடசாலைகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்!

## ஒரு லட்சத்து 27 ஆயிரம் ரூபா பெறுமதியில் சீருடைத்துணிகள்

திருகோணமலை – ஈச்சிலம்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள, வெருகல் பிரதேசத்தில் அமைந்துள்ள 02 அறநெறிப் பாடசாலைகளான, கறுக்காமுனை அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த 48 மாணவர்கள், புன்னையடி அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த 27 மாணவர்கள் ஆகியோருக்கு 85 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைத் துணிகள் 2 ஆம் கட்டமாக வழங்கப்பட்டது.

அம்பாறை – பொத்துவில் பிரதேச செயலக பிரிவில் உள்ள, குண்டுமடு அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த 102 மாணவர்களுக்கு 42 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.

# மத்திய மலை நாட்டு பகுதிகளில் உள்ள காடுகளுக்குத் தீ வைக்கும் விசமிகள்!



(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட காடுகளில் விஷமிகள் தீ வைப்பதால் பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன. இதனால் நீர் ஆதாரங்கள் அழிக்கப்படுவதுடன் வனவிலங்குகளும் அழிவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் ஒரு மாதத்துக்கும் மேலாக கடுமையான வறண்ட வானிலை காணப்படுகிறது. இந்த நிலையில் நீர்தேக்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட காடுகள் மற்றும் மானா பற்றைகளுக்கு விஷமிகளால் தீ வைக்கப்படுகின்றது.

அதன் காரணமாக பல ஏக்கர் காடுகள் அழிக்கப்படுவதால் அவை வறண்டு போகும் அபாயம் உள்ளது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் சில குழுக்கள் பொழுது போக்கு மற்றும் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக காடுகளுக்குத் தீ வைக்கின்றன என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

தேசிய நீர் மின் அமைப்பின் மவுசாகலை, காசல்ரீ மற்றும் மேல் கொத்மலை நீர் மின் நிலையங்களுக்கு முக்கிய நீர் ஆதாரங்களாக இருக்கும் காடுகள் மற்றும் மானா பற்றைகளை எரிப்பதால், நீர் ஆதாரங்கள் வறண்டு, முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வேகமாகக் குறைகிறது.

மவுஸ்சாகலை மற்றும் காசல்ரீ மேல் கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் காலை நிலவரப்படி, நிரம்பி வழியும் மட்டத்தில் இருந்து முறையே 10 மற்றும் 15 அடி குறைந்துள்ளது என்று நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியாளர்கள் தெரிவித்தனர்.

சுற்றுச்சூழல் அமைப்புகளும், அப்பகுதி மக்களும் இதுபோன்ற செயல்களைச் செய்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்துமாறு பொறுப்பானவர்களை வலியுறுத்துகின்றனர்.

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நீர் தேக்க பகுதியில் உள்ள அனைத்து பற்றைகளுக்கும் விஷமிகள் தீ வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# உலகப் போர்ப் பதற்றமும் இலங்கையின் சவால்களும்

## சட்டக் கல்லூரியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்

(விருட்சவேந்தன்)

உலகம் முழுவதும் பதற்றமாக இருக்கிறது. பெரியதொரு போர் மூண்டிருக்கிறது. மத்திய கிழக்கு எங்கும் யுத்தப் பேரிகை முழங்கிக் கொண்டிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே இன்னொரு நாட்டைத் தாக்குவதற்கு இருக்கும் அதிகாரம் ஒரு வல்லரசின் கைகளில் வந்திருக்கிறது. இதுபற்றிக் கண்டனங்கள் எவ்வளவுதான் வந்தாலும், இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு இதனால் ஏற்படும் பாதிப்புகள் மிகவும் பாரதூரமானவை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் பவளவிழா தொடர்பில் வித்தக விழா மற்றும் "நீதி முரசு" வெளியீட்டு நிகழ்வு என்பன கொழும்பு, இலங்கை சட்டக் கல்லூரியில் நடைபெற்றது. அதில், சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்தத் தமிழ் மன்றத்தின் தலைவராக 1982 ஆம் ஆண்டில் நான் பதவி வகித்தேன். 75 ஆண்டுகளைக் கடந்து பவளவிழா தொடர்பில் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்ற இந்தத் தமிழ் மன்றத்தின் நிகழ்ச்சியைப் பார்க்கின்ற பொழுது மிகப் பூரிப்பாக இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில் எங்களுடைய

தொடர்ச்சி▼






# உலகப் போர்ப் பதற்றமும் இலங்கையின் சவால்களும்

**தொடர்ச்சி▲**

காலத்தில் உங்களை விடவும் நான்கு மடங்கு கூடுதலாகத் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்கள் இருந்தார்கள். இன்று அந்த நிலைமை சட்டக் கல்லூரியில் இல்லை. இதை நிவர்த்தி செய்வதற்கு அவ்வப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் கைகூடவில்லை.

எங்களுடைய காலத்தில் சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிக்கு இடையிலான மரபு ரீதியான போட்டிகள், சட்ட பீடத்துக்கும் எங்களுக்கும் இடையிலான விவாதம், இந்த எழுந்தமான பேச்சு, அறங்கூறும் அவையத்துப் போட்டி போன்ற விடயங்களை மாத்திரம் நடத்திவிட்டு நாங்கள் திருப்தியடைந்துவிட்டோம்.

ஆனால், இன்று நீங்கள் நிறைய பரிசில்கள் மாத்திரமல்ல, இன்னும் விவாதப் போட்டிகளையும் கூடுதலாகச் சட்ட பீடம், மருத்துவப் பீடத்துக்கு இடையிலான விவகாரங்களையும் கூட்டியிருக்கிறீர்கள் என்பது மிகவும் மனநிறைவைத் தருகிறது. குறிப்பாக, இந்த நிர்வாகம் மிக விமர்சையாக நடத்திய 75 ஆவது அகவை கொண் டாட்டம் மிகச் சிறப்பாக நடந்தது.

இப்பொழுது உலகம் முழுவதும் பதற்றமாக இருக்கிறது. பெரியதொரு போர் மூண்டிருக்கிறது. மத்திய கிழக்கு எங்கும் யுத்தத்தின் பேரிகை முழங்கிக் கொண்டிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே இன்னொரு நாட்டைத் தாக்குவதற்கு இருக்கிற அதிகாரம் ஒரு வல்லரசின் கைகளில் வந்திருக்கிற துர்ப்பாக்கிய நிலையைக் காண்கிறோம்.

இன்று நேற்றல்ல, ஐக்கிய நாடுகள் சபையை ஆரம்பித்ததும் ஐ. நா. சாசனம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த ஐக்கிய நாடுகள் சாசனத்தை வைத்துக் கொண்டு, இன்று நாங்கள் உள்நாட்டில் பேசும் சட்டத்தின் ஆட்சி என்பது வெறும் நாட்டின் உள்விவகாரத்தில் மாத்திரமல்ல, சர்வதேச விவகாரத்திலும் அது தேவை என்பதற்காக Rule-based International Order என்று ஒன்று இருக்கிறது. அதைத் தொடர்ந்தும் மீறுகிற – எடுத்த எடுப்பில் நினைத்ததை எல்லாம் செய்துகொண்டு போகிற ஒரு வல்லரசின் இந்தப் போக்கு சம்பந்தமாகக் கண்டனங்கள் எவ்வளவு தான் வந்தாலும், எங்களைப் போன்ற சிறிய நாடுகளுக்கு இதனால் ஏற்படும் பாதிப்புகள் மிகவும் பாரதூரமானவை.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருக்கிறோம். இப்பொழுது யுத்தத்தின் காரணமாக எண்ணெய் விலை பல மடங்கு அதிகரிக்கப் போகிறது. இதற்கு எப்படி நாங்கள் ஈடுகொடுக்கப் போகிறோம்? அடுத்த வருடத்தில் இருந்து நாங்கள் பில்லியன் டொலர் கணக்கில் கடன் திருப்பிச் செலுத்த வேண்டிய கடப்பாடு வருகிறது. இதை ஒத்திவைப்பதற்கும் சர்வதேச நாணய நிதியம் முன்வருமா என்பது தெரியாது. அதுவும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

அவர்களாக யுத்தங்களைத் தொடங்கி, இப்படி அந்தக் கிரமங்களைப் புரிந்து கொண்டு செல்லும்போது, மத்திய கிழக்கில் இருக்கும் இஸ்ரேல் என்ற ஒரு நாட்டின் தேவைக்காக இவ்வளவு பாரிய ஒரு யுத்தத்தை அவர்கள் அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள் என்பது மிகக் கண்டனத்துக்கு உரிய விடயமாகும்.

சிறிய நாட்டில் இருக்கும் எங்களுக்கு இதைக் கண்டித்துப் பேசுவதைத் தவிர வேறேதும் செய்துவிட முடியாது.

ஆனால், இதற்கு ஒர் அடிப்படைக் காரணம் இருக்கிறது. அந்த அடிப்படைக் காரணம் எங்களுடைய நாட்டிலும் எங்களுடைய அரசியல் யாப்பிலும் இருப்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. நிறைவேற்று அதிகாரம் ஒருவரின் கைகளில் இருக்கும்போது எடுக்கும் இவ்வாறான முடிவுகள் மிகவும் ஆபத்தானவை.

1978 ஆம் ஆண்டு ஆக்கிய அரசியலமைப்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்டுவந்ததில் இருந்து அது நல்லதா, கெட்டதா? என்ற விவாதம் தொடர்ந்து கொண்டு போகிறது. இன்று ஆட்சியில் இருப்பவர்களும் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவோம் என்று வாக்களித்துவிட்டு வந்தவர்கள்தான். ஆனால், அவர்களுடைய ஆட்சி முடிந்து போகும் வரை இதைச் செய்யமாட்டார்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது.

ஏனென்றால் இதில் இருக்கும் அதிகாரத்தைப் பாவித்து எதையும் செய்யலாம். இது சட்டத்தின் ஆட்சியை மிகப் பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகின்ற, ஒரு தனிநபரின் கையில் இருக்கிற அதிகாரமாக இருப்பதுதான் இன்று இந்த மிகப் பெரிய அனர்த்தத்தை உலகளாவிய ரீதியிலும் உருவாக்கியிருக்கிறது.

இந்த நாட்டிலும் இலைமறை காயாகத் தொடர்ந்தும் ஒவ்வொரு நாளும் இந்த விவகாரம் மிகப்பெரிய பாதிப்பான விடயமாக இருக்கிறது. எடுத்த எடுப்பில் நிறைய மாற்றங்களைச் செய்வதற்கான அதிகாரம் இன்றைய ஆட்சியாளர்கள் கைகளிலும் இருக்கிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் நாட்டு மக்கள் இவர்களுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டார்கள். யாரிடத்திலும் எதையும் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது.

நீதிமன்றத்தில் இது அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்டதா இல்லையா என்னும் விவகாரத்தில் அடிக்கடி உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் நடக்கின்ற போது, வாதிடும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் இருக்கும் இந்த நிலையில், எங்களைப் பொறுத்தமட்டில் வருங்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றிச் சட்ட மாணவர்கள் மிகவும் உன்னிப்பாக இருக்க வேண்டும். சட்டத்தரணிகள் சங்கமும் உன்னிப்பாக இருக்க வேண்டும்.

அண்மையில் சட்டத்தரணி ஒருவர் கொல்லப்பட்டபோது முழுச் சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் போர்க்கொடி தூக்கினார்கள். ஆனால் அதைவிடவும் மிகப்பெரிய பாதிப்பு அரசியல் யாப்பில் கைவைக்கின்றபோது ஏற்படும்.

எதேச்சதிகாரமாகப் பல விடயங்களைச் செய்வதற்கு எத்தனம் நடக்கிறது என்று கேள்விப்படுகிறோம். எனவே, அவ்வாறான விடயங்கள் நடக்கின்ற போது, அதற்கெதிராகக் குரல் கொடுப்பதில் சட்ட மாணவர்களும், சட்டத்தரணிகளும் முன்னிலை வகிக்க வேண்டும். அது சம்பந்தமாக மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும் என்பது எங்களுக்கிருக்கும் மிகப்பெரிய தார்மீகப் பொறுப்பாகும். – என்றார்.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


# சிவனொளிபாத மலைக்கு போதைப் பொருள் கொண்டு சென்ற ஆறு பேர் கைதாகினர்!

(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளிபாத மலைக்கு போதைப் பொருள் கொண்டு சென்ற ஆறு பேர் நல்லதண்ணி நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பதில் நீதிவான் முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர் என்று நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

25 வயது முதல் 33 வயது வரை உள்ள ஆறு பேர் கஞ்சா, ஐஸ், போதை மாத்திரைகள், வெளிநாட்டு சிகரெட் போன்றவற்றுடன் மொறட்டுவ, மாத்தறை, பாயாகளை, வங்கதொனிய, ஹக்மன, மீகொட பகுதிகளில் இருந்து சிவனொளிபாத மலைக்கு வந்துள்ளனர். இந்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்ரீகர்களில் சந்தேகத்துக்கு இடமானவர்களை நல்லதண்ணி பொலிஸார் தொடர்ந்து பரிசோதனை செய்து வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.






# வள்ளுவம் படிப்போம் வாருங்கள் அனைவரும்!

## (நாளை திருவள்ளுவர் குரு பூசை)

ஆதியில் அகரம் அந்தத்தில் னகரம்
அடியும் முடியும் அனைத்தும் அறிவே
தேடிடு மனைத்தும் ஓரிடம் குவித்து
திரட்டியே தருவது வள்ளுவர் குறளே

தமிழைத் தாங்கிப் பிடிப்பதும் குறளே
தரணி சிறந்திட வைப்பதும் குறளே
அமரர் உலகில் வாழலாம் என்று
அதற்கு வழியை வகுத்ததும் குறளே

அறம் பொருளின்பம் அனைவர்க்கும் அவசியம்
அழகுடைத் தமிழால் அளிப்பது குறளே
அறமொடு பொருளும் அறமொடு இன்பமும்
இணைவது முக்கியம் என்பது குறளே

வள்ளுவம் மொழியாக் கருத்துகள் இல்லை
வாய்மையை வள்ளுவம் போற்றியே பார்க்குது
உள்ளுக்குள் நுழைந்து உயர்வைத் தேடுது
உணர்வைத் தட்டி எழுப்பியே நிற்குது

வெற்றுக் கருக்களை விரட்டுது வள்ளுவம்
வேண்டிய கருக்களைத் தோண்டியே எடுக்குது
விதண்டா வாதம் பேசா வகையில்
விளக்கம் கொடுத்து விளக்குது வள்ளுவம்

கல்வியைப் பற்றி கற்பதைப் பற்றி
வள்ளுவம் சொன்னதை மறுத்திடல் முடியா
சொல்லிய அனைத்தும் தொல்லுல கெங்கணும்
உள்ளவர் ஏற்றால் உயர்வை எய்துவார்

ஒழுக்கம் பற்றிய வள்ளுவப் பார்வை
உலகம் அறியா உன்னதப் பார்வை
பிறப்புடன் இழுக்கை இணைத்திடும் கருவை
உடைத்திடும் வள்ளுவம் உயர்நிலைத் தத்துவம்

தூய்மை என்பதே துறவே ஆகும்
வாய்மை அதனின் வடிவே ஆகும்
மழித்தலும் வேண்டாம் நீட்டலும் வேண்டா
பழித்ததை விடுவென பகன்றது வள்ளுவம்

நினைத்திட முடியா தனித்துவ தத்துவம்
ஒவ்வொரு பார்வையும் உன்னதப் பார்வையே
நடைமுறைத் தத்துவம் பொதிந்திடும் பொக்கிஷம்
நந்தமிழ் தமிழ்மொழியின் அற்புதம் வள்ளுவம்

வள்ளுவம் படித்தால் வழுவிலா வாழலாம்
தெள்ளிய தமிழில் தெளிந்தநல் தத்துவம்
உள்ளந் தெளியும் கள்ளம் அகலும்
வள்ளுவம் படிப்போம் வாருங்கள் அனைவரும் !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**




# சத்தியசாயி நிறுவகத்தின் ஏற்பாட்டில் மணற்காட்டில் கடற்கரையில் சிரமதானம்

(பூ.லின்ரன்)

வட பிராந்திய சத்தியசாயி நிறுவகத்தின் ஏற்பாட்டில் மணற்காட்டில் கடற்கரையில் சிரமதானம் இடம்பெற்றது.

வட பிராந்திய சத்தியசாயி நிறுவகத்தின் ஏற்பாட்டில் மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மணற்காட்டு கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், வட பிராந்திய சத்தியசாயி நிறுவகத்தின் தொண்டர்கள், பருத்தித்துறை பிரதேச சபை ஊழியகர்கள், உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை பிரதேச சபை சபை 8 வட்டார உறுப்பினர் அ.அகஸ்ரின், பருத்தித்துறை முதலுதவி சங்கம், மணல்காட்டு அபிவிருத்தி சங்கங்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# புடைவை, ஆடைக் கைத்தொழில் 15 ஆவது கண்காட்சி கொழும்பில்

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையின் புடைவை மற்றும் ஆடை உற்பத்தி துறையில் முன்னணி கண்காட்சி தொடரில் 15 ஆவது இலங்கை கண்காட்சி - 2026 05 ஆம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதிவரை கொழும்பு - 10 இல் அமைந்துள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை உற்பத்தியாளர்களுக்கு உலகளாவிய தொழில்நுட்பத்தையும் மாற்று மூலங்களையும் உபாய முறை பங்குடமைக்கான உடனடி அணுகலையும் வழங்கும் மிகவும் விரிந்த உபாயமுறைத் தளம் என்ற அதன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தப்படும் வித்தில் இந்தத் துறையில் உள்ள அனைத்துத் தரப்பினரும் மீண்டும் ஒரே கூரையின் கீழ் ஒன்று கூடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஏற்றுமதி இறக்குமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜயசிங்க, ஜி.எம்.எஸ். குளோபல் இணைப் பணிப்பாளர் அபேசிக்கா டாஸ், பிலிக்ஸ் பெர்ணான்டோ, இலங்கை அப்ரல் கமான்ட்ஸ் சங்கத்தின் தலைவர், இலங்கை காமன்ஸ் ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவி ரஜித்தா ஜெயசூரியா, ஜி.எம்.எஸ். குளோபல் யு.எஸ்.ஏ. இணை நிறைவேற்று அதிகாரி எஸ்.எஸ். சர்வார் ஆகியோர் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் மேற்படி தகவல்களைத் தெரிவித்தனர்.

இலங்கையில் நடைபெறும் கண்காட்சி பங்களாதேஸ், பிரேசில், மொரோக்கோ மற்றும் தாய்லாந்து




# மட்டு. கொண்டையங்கேணி தமிழ் கிராமத்தை முஸ்லீம் கிராமமாக்கி அபகரிப்பதற்கு முயற்சி!

## பிரதேச சபை உறுப்பினர் தனபாலசிங்கம் நிர்மலன் கண்டனம்

(கனகராசா சரவணன்)



தனித் தமிழ் மக்கள் வாழும் வாழைச்சேனை கொண்டையங்கேணி கிராமம் இன்று கொண்டயன்கேணி முஸ்லிம் கிராமம் என்று உருமாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர்களுடைய பூர்வீகக் கிராமங்களின் பெயர்களைத் தங்களுடைய கிராமங்கள் எனத் தெரிவித்து எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள் என அபகரிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனை வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தனபாலசிங்கம் நிர்மலன் தெரிவித்தார்.

வாழைச்சேனை கிண்ணியடியில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழைச்சேனை பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக வட்டார எல்லைகளின் எல்லை நிர்ணயத்தை அடையாளப்படுத்தும் பிரேரணை ஒன்று கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் தவிசாளரால் கொண்டுவரப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த பிரதேசம் கடந்த காலத்தில் எல்லை நிர்ணய பிரச்சினையில் தீர்க்கப்படாத இந்த பிரச்சனைக்கு உரிய பிரதேசமாக உள்ளது. ஒரு முழுமையான தீர்வு காணப்படாமல் இந்த எல்லை நிர்ணயங்களை தங்களுக்கு தாங்களே தீர்க்கமாக தீர்மானித்து ஒரு வருமானத்தை நோக்கமாக கொண்டு எமது சமூகத்தின் எல்லையை பின்னுக்கு தள்ளும் செயற்பாடை செய்யக் கூடாது என வலியுறுத்தினேன். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

கோறளைப்பற்று பிரதேசத்தில் 14 வட்டாரங்கள். இதில் 4 முஸ்லீம் வட்டாரங்கள். 10 வட்டாரங்கள் தமிழர்களது வட்டாரங்கள். இதில் 8 வட்டாரங்களில் முழுக்க முழுக்க தமிழர்கள் வாழும் சூழல் இருக்கின்ற நிலையில் 2 வட்டாரங்கள் தமிழர்கள், முஸ்லிம்கள் எதேச்சையாக குடியேற்றப்பட்டு வாழுந்து வருகின்ற வட்டாரங்கள்.

இதில் எங்களுக்கான ஒரு எல்லை நிர்ணயம் வகுக்கப்படாமல் பிரதேச சபையால் அவர்களாகவே எல்லை நிர்ணயங்களை தயாரித்து அதில் வருமானங்களை அதிகரிக்க வேண்டும் என்பது, எதிர்காலத்திலே தமிழ் கிராமங்கள் சுருங்கி போகக்கூடிய அளவுக்கு அமைந்து விடும்.

எனவே வாழைச்சேனை வட்டாரம், கறுவாக்கேணி வட்டாரம் என்பது இரண்டு தமிழ் கிராமங்கள். இந்தக் கிராமங்களில்தான் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. கறுவாக்கேணி வட்டாரம் என்பது வாழைச்சேனை இலங்கை மின்சார சபையின் வீதியை ஒட்டியதாக அமைந்திருக்கின்றது.

ஆனால் அதனை அடையாளப்படுத்தப்பட்டபோது, அதற்கு எதிராகக் குழப்பங்கள் எழுப்பப்பட்ட போது, அவை அனைத்தும் இடை நடுவில் விடப்பட்டன. இந்த நிலையில் பிரதேச சபையின் நிர்வாகம் எதனூடாகக் கறுவாக்கேணி 10 ஆம் வட்டாரத்தைப் பிரித்து இதுதான் கறுவாக்கேணி 10 ஆம் வட்டாரம் என அறிவிக்க போகின்றது என்பது சந்தேகத்துக்கு இடமாக உள்ளது.

கோறளைப்பற்று பிரதேச சபை என்பது தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேச சபையாக இருந்தாலும் மக்களுக்கான ஒரு சரியான தீர்வுகளையும் முடிவுகளையும் எடுக்க முடியாமல் இருக்கும் ஒரு பிரதேச சபையாக இருக்கின்றது.

இந்தக் கறுவாக்கேணி 10 ஆம் வட்டாரத்தில் கிராம சேவகர் பிரிவு தனித் தமிழ் மக்களைச் சேர்ந்த பிரிவு. ஆனால் இதே கறுவாக்கேணி கிராம சேவகர் பிரிவுடன் உள்ள கொண்டையன்கேணி என்னும் கிராமம் இன்று கொண்டயன் கேணி முஸ்லிம் கிராமம் என மாற்றப்பட்டு கொண்டயன்கேணி கிராம அபிவிருத்தி சங்கம், மற்றும் பள்ளிவால், சனசமூக நிலையம், என அரச சார்ந்த சங்கங்கள் அனைத்தும் கொண்டயங்கேணி முஸ்லீம் கிராமம் என்று உருவாக்கப்பட்டுள்ளது.

பல தசப்தங்களாக கொண்டையன் கேணி, கறுவாக்கேணி இணைந்து கறுவாக்கேணி கிராம சேவகர் பிரிவில் இயங்குகின்ற ஒரு கிராமம் இந்த கொண்டையங்கேணி. இதன் பெயர் மட்டும்தான் கொண்டையங்கேணி முஸ்லீம் என்று இருக்கின்றதே தவிர அவர்களுடைய அனைத்து நிர்வாக செயற்பாடுகள் ஓட்டுமாவடி பிரதேச செயலகத்துக்குள் உள்ள செம்மண் ஓடை கிராம சேவகர் பிரிவுக்குள் நடைபெறுகின்றது.

ஓட்டுமாவடி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள செம்மண்ஓடை கிராம சேவகர் பிரிவில் நிர்வாக நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமாக இருந்தால் ஏன் கொண்டையங்கேணி முஸ்லீம் கிராமம் என இந்த கிராமத்துக்கு பெயர் சூட்டவேண்டும். இது மிகவும் ஆபத்தான விடயம்.

தமிழர்கள் வாழ்ந்துவரும் பூர்வீக கிராமங்களின் பெயர்களைத் தங்களுடைய கிராமங்க என்று தெரிவித்து எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் முஸ்லீம்கள் வாழ்ந்தார்கள் என்ற ஆதாரத்தை காட்டுவதற்காக செயற்படுகின்றனர். இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கல்குடா தேர்தல் தொகுதி என்பது முஸ்லீம்களுடனும் தமிழ்களுடனும் ஒரு தேர்தல் நோக்கத்துக்கான தொகுதி. ஆனால் ஓட்டுமாவடியில் இருந்து உருவாக்கப்படுகின்ற இந்த சங்கங்கள், அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், வெளிநாடுகளில் இருந்து உருவாக்கப்படுகின்ற சங்கங்கள் எல்லேமே தங்களுடைய விலாசத்தை, அடையாளத்தை கல்குடா என்று பதிவு செய்து வருகின்றனர். இது என்ன தேவை?

இது இன்னொரு 20 வருடத்துக்குப் பின்னர் முஸ்லீம்களின் பூர்வீக நிலம் என்பர்.

கோறளைப்பற்று பிரதேசத்தில் எங்கள் சமூகம், மக்கள் சார்ந்து யாரும் பேசுவதில்லை. அரசியல் ரீதியாக பிரதேச சபைகளில் இருக்கும் அவர்கள் அனைவரும் வாய்முடிகளாக தங்களுடைய அற்ப சொற்ப பிரதேச சபை ஆசனத்தை பாதுகாப்பதற்காக பேசாமல் இருக்கின்றனர். அல்லது பேசத் தெரியாமல் மடந்தையாக இருக்கின்றனர்.

நாங்கள் அப்படி இருக்க முடியாது. எனவே கல்குடா தொகுதிக்குள் இருக்கும் மக்களே உன்னிப்பாக சிந்திக்க வேண்டும். அதேவேளை பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது வாழைச்சேனை வட்டாரம், கறுவாக்கேணி வட்டாரம் ஆகியன இரண்டு வட்டாரங்கள் என்பது பரிசீலனை செய்யப்பட்டு எல்லை நிர்ணயம் ஒழுங்காக செய்யப்பட்டதன் பின்னர்தான் பிரதேச சபைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு இனத்தின் உடைய மொழியும் அடையாளமும் முகவரியும் எங்கு களவாடப்படுகின்றதே அங்கு அந்த இனத்துக்கு எதிராக வன்முறையும் பயங்கரவாதமும் தோற்று விக்கப்படுகின்றது.- என்றார்.

# ஈழத்தமிழர் மகளிர் சிறுவர்களுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மகளிர் தின நிகழ்வு!

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச மகளிர் தினம் யாழ். வீர சிங்கம் கலைச்சார மண்டபத்தில் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படும் என்று ஈழத்தமிழர் மகளிர் சிறுவர்களுக்கான அமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 08 ஆம் திகதி காலை 8. 30 மணிக்கு யாழ். வீரசிங்கம் கலாசார மண்டவத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகளை எமது ஈழத்தமிழர் மகளிர், சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான அமைப்பு ஊடாக ஒழுங்கமைப்பு செய்துள்ளோம் என அந்த அமைப்பின் பணிப்பாளர் திருமதி வாசுகி சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இன்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்பட்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கடந்த 9 வருடங்களுக்கு மேலாக அரசியலில் செயற்பட்டு வந்தேன்.அதனிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ளேன்.

சிங்கள ஆட்சியாளர்ளால் திட்டமிட்டு நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட தமிழின அழிப்பில் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களை ஒருங்கிணைத்து செயற்பட முடியாத அளவுக்கு அரசியல் தடையாக இருப்பதாலும் இதனால் முழுமையாக செயற்பட முடியாது என்பதன்




காரணத்தால் நான் அரசியலில் இருந்து என்னை முழுமையாக விடுவித்துக் கொள்கிறேன்.

அரச பயங்கரவாதத்தின் திட்டமிட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது இலக்கு வைத்து நடத்தப்படும் வன்கொடுமைகள் சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் போதைப் பொருள் திணித்தல் போன்றவற்றை தடுப்பதை இலக்காக கொண்டு நான் செயற்பட்டதால் அரசியலால் பல்வேறுபட்ட தடைகள் எனக்கு இருந்தன. இதன் காரணத்தால் எனது வெளிப்படையான செயற்பாட்டை வடகிழக்கில் வாழும் ஆர்வமுள்ள பெண்களை இணைத்து ஈழத் தமிழர் மகளிர்,சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான அமைப்பை கடந்த ஜனவரி 5 திகதி உருவாக்கியுள்ளோம். இதில் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் எமது உறுப்பினர்கள் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக 8 மாவட்டங்களை ஒருங்கிணைத்து செயற்பட்டு வருகின்றோம் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஈழத்தமிழர் தேசத்தில் பெண்கள் மற்றும் சிறார்களை இலக்கு வைத்து திட்டமிட்டு நிகழ்த்தப்படும் வன்கொடுமைகள் துயர சம்பவங்கள் மற்றும் தமிழ் மொழி பயன்பாடு அழித்தல் பாரம்பரிய வாழ்வியல் முறைகள் மாற்றுதல்களுக்கு எதிராக குரல் கொடுப்பதோடு அதனை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் கவனத்திற்கும் வெளிக்கொண்டர எமது ஈழத்தமிழர் மகளிர்,சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான அமைப்பு (Eelam Tamil Women and Children Rights Protection and Promotion Organization) முழு மூச்சாக செயற்படும் என்பதை இந்த ஊடக வாயிலாக அறியத்தருகின்றோம்.

எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி நடைபெறும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ் வீரசிங்கம் மண்டபத் தில் காலை 8:30 மணிக்கு இடம்பெறும். அனைவரையும் கலந்து கொண்டு அன்றைய மகளிர் தினத்தை உயிர்ப் பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.- என்றார்.

# மலையகம் நடை பயணத்தில் பங்கேற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்குக் கௌரவிப்பு!

(மஸ்கெலியா நிருபர்)

தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையக மக்கள், 200 ஆண்டுகள் கடந்த பின்னரும் காணி மற்றும் நில உரிமைகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர். இவர்களும் இந்த நாட்டின் சம உரிமையுடைய பிரஜைகள் என்ற அடிப்படையில், அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும், இந்த மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்வதற்குமான வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியாக “மலையகம் 200” நடை பயணம் அமைந்தது.

2023.07.28 அன்று தலைமன்னார் இலிருந்து மாத்தளை வரை 280 கிலோ மீற்றர் தூரம், 12 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த நடை பயணம் மலையக வரலாற்றில் ஒரு மைல் கல்லாகப் பதிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் சில கிறிஸ்தவ அமைப்புகள் இணைந்து இதனைச் சமய நிகழ்வாக நடத்தத் திட்டமிட்டிருந்த போதிலும், மலையக மக்களுக்கு வாழ்வாதார மற்றும் உரிமைப் பிரச்சினைகள் தாக்கம் உள்ளமையை வெளிப்பட வேண்டும் என்ற நோக்கில் சமூக ஆய்வாளர்கள் முன்வந்தனர்.

அவர்களின் கருத்து அனைவராலும் ஏற்று கொள்ளப்பட்ட நிலையில், அனைவரின் பங்களிப்புடனும் இந்த நடை பயணம் நிறைவுபெற்றது.

280 கிலோமீட்டர் தூரம் நடப்பது எளிய காரியம் அல்ல. நடையாளர்களைத் தெரிவு செய்வதிலும், அவர்களைத் தயார்படுத்துவதிலும் பல சவால்கள் இருந்தன. பிரிடோ நிறுவனம் 20 பெண்கள் மற்றும் 30 ஆண்கள் என மொத்தம் 50 பேரை முழுநேர நடையாளர்களாகத் தெரிவு செய்து இந்த முயற்சியை முன்னெடுத்தது.

இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தாலும், இந்த நடைப் பயணத்தின் வெற்றிக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக



சில சிரேஷ்ட பிரஜைகளின் உணர்வு பூர்வமான பங்களிப்புக் குறிப்பிடத்தக்கதாகும்.

பிச்சை சந்தியாகு லோகநாதன், பெருமாள் கணேசன், முருகன் கணேசன் மற்றும் ஆறுமுகம் வேலு ஆகியோர் பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களின் அர்ப்பணிப்பு இந்த நடை பயணத்தின் அச்சாணியாக அமைந்தது.

இன்றைய சூழலில் பல உரிமைப் போராட்டங்களில் இளைஞர்களின் பங்கேற்பு குறைந்து காணப்பட்டாலும், இந்த நாட்டின் வளர்ச்சிக்கும் உரிமைக்கான போராட்டங்களுக்கும் நீண்ட காலமாக உழைத்து வரும் சிரேஷ்ட பிரஜைகளின் பங்களிப்பு வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒன்றாகும்.

இந்த நிலையில் கடந்த வாரம் பிரிடோ நிறுவனம் தோட்டங்களில் இயங்கும் சமூக அபிவிருத்தி குழு உறுப்பினர்களுக்காக ஹட்டனில் நடத்திய விழிப்புணர்வு கருத்தரங்கின் போது, இந்த சிரேஷ்ட பிரஜைகள் மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரிடோ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மைக்கல் ஜோக்கிம் கௌரவிப்பை வழங்கினார்.



# கிளங்கன் வைத்தியசாலையின் பிரேத அறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சடலம்!

## வைத்தியசாலை முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இறந்த பெண்ணின் சடலத்தை அங்கு வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர் எனக் கூறி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 25 ஆம் திகதி ஹட்டன் ஏபோட்ஸ்சிலி தோட்டப் பகுதியில் 23 வயதுடைய பெண் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சடலத்தை கிளங்கன் வைத்தியசாலையில் பணிபுரிந்து வரும் மூன்று சிற்றூழியர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்கு முன்பாக ஒன்று திரண்டு மக்கள் பிரேத அறையில் பாலியல் வல்லுறவு, வைத்தியசாலை நிர்வாகமே உண்மையை வெளிகொண்டுவா போன்ற கோஷங்களை எழுப்பியவாறு பாதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, ஆர்பாட்டம் இடம் பெற்ற இடத்துக்கு டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உட்பட ஏனைய வைத்தியர்களும் வருகை தந்திருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வைத்திய அதிகாரி பஷ்லி குறிப்பிடுகையில்,

தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் சடலம் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது. சடலம் முதல் நாள் பிரேத அறையில் இருந்தது போலவே மறுநாளும் காணப்பட்டது. இது தொடர்பாக முறைபாடு கிடைத்துள்ளது. பிரேத அறையில் பொறுத்தப்பட்டிருந்த சீ.சீ.டி.வி. கமராவை நாங்கள் பரிசோதித்துப் பார்த்தோம். அப்போது அந்த மூன்று சிற்றுழியர்கள் பிரேத அறைக்கு போய்வந்த காட்சி அதில் பதிவாகியுள்ளது. இது தொடர்பாக நாங்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.– என்றார்.

இதேவேளை, குறித்த மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்து பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.













# புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலை புலிகள் கட்சியின் 10 ஆவது ஆண்டு விழா வல்வெட்டித்துறை தீருவிலில்!

(பூ.லின்ரன்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சியின் 10 ஆவது ஆண்டு விழா வல்வெட்டித்துறை தீருவில் குமரப்பா புலேந்திரன் சத்துக்கத்தில் அதன் தலைவர் இன்பராசா தலைமையில் நேற்று மாலை இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகரபிதாவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக மாவீரர் பண்டிதரின் தாயாரும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் புனர்வாழ்வழிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சியின் 10 ஆண்டுகால அறிக்கை வாசிக்கப்பட்டது. அவர்களின் கொள்கை பிரகடனமும் வாசிக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டது.

இதில் புனர்வாழ்வழிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.












# நாடளாவிய ரீதியில் இன்று மர நடுகை திட்டம் முன்னெடுப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

உதவும் பொற்கரங்கள் அமைப்பின் கனடா அமைப்பின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் மர நடுகை திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

உதவும் பொற்கரங்கள் அமைப்பின் கனடா அமைப்பின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான தமிழ் பணி செம்மல், சமூகசேவகர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளையின் 66 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

அதனை முன்னிட்டு ஒரு தசாப்த காலமாக தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் அவர் தமிழ் மக்களுக்குச் செய்த பணியை, சேவையைக் கௌரவிக்கும் முகமாக தாயக உறவுகளால் நாடளாவிய ரீதியில் மர நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உதவும் பொற்கரங்கள் அமைப்பின் பணிப்பாளர் வி.கணபதிப்பிள்ளை தனது சொந்த நிதி மற்றும் தனது நண்பர்கள், உறவுகளின் பங்களிப்புடனும், தன்னிடம் உதவி கேட்கும் உறவுகளுக்காகவும் கல்வியை தொடர்வதற்கு பொருளாதார ரீதியாக நெருக்கடியை சந்திக்கும் மாணவர்களுக்கும் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக



உதவி செய்து சமூக சேவையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா நாட்டு அரசின் ஊடாக சமூக சேவைக்கான பல்வேறுபட்ட விருதுகளை பெற்றுள்ள அவரை கௌரவிக்கும் முகமாக இந்த இம்மர நடுகை திட்டம் ஒரு வாரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.





# பல்வேறுபட்ட துறைகளில் பிரகாசிக்கும் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

(வாலகிருஸ்ணா)

இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் உள்ள பல்வேறுபட்ட துறைகளில் பிரகாசிக்கும் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது.

வேவ் டான்ஸ் ஸ்ரூடியோவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இசைஞானி இளையராஜாவின் இசையமைப்பில் இலங்கையில் உருவான முதல் திரைப்படமான அந்தோனி திரைப்படத்தின் பெயர் தாங்கிய அந்தோனி வேல்ஸ் விருது என்னும் பெயரில் இந்த விருது வழங்கும் விழா ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

வேவ் டான்ஸ் ஸ்ரூடியோவின் இயக்குனர் எஸ்.கிருஸ்ணகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்ப மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு கலந்துகொண்டார்.



சிறப்பு அதிதியாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி கெனடி, மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்செயன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் விசேடமாக அந்தோனி திரைப்படத்தின் திரைப்படக் குழுவினர் வருகைதந்ததுடன் வடக்குக் கிழக்கு உட்பட இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து கலைஞர்கள் கலந்துகொண்டனர்.















# போர் நிறுத்தம் குறித்து நெதன்யாகு - மோடி பேச்சு: 90 லட்சம் இந்தியர்களை பாதுகாக்க நடவடிக்கை

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் தீவிரமாக நடந்து வருவதால், மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

அந்த நாடுகளில் வசிக்கும் 90 லட்சம் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு அவசர ஆலோசனை நடத்தியது.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய மோடி, விரைவில் போர் நிறுத்தம் செய்து, அமைதியை ஏற்படுத்துமாறு வலியுறுத்தினார்.

அணு ஆயுத தயாரிப்பை நிறுத்த வேண்டும் என்பதை ஏற்க மறுத்த ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இராணுவம் இணைந்து போர் தொடுத்தன. இந்த தாக்குதலில் ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல், அமெரிக்க இராணுவ முகாம்கள் உள்ள அண்டை நாடுகளான கட்டார், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் மீது ஏவுகணைகள், ட்ரோன்களை வீசி ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால், மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள 11 நாடுகளில் வான்எல்லைகள் மூடப்பட்டுள்ளன. இந்திய விமான நிறுவனங்கள் 350 சர்வதேச விமான சேவைகளை ரத்து செய்துள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் 90 லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இவர்களது பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு நேற்று முன்தினம் இரவு அவசர ஆலோசனை நடத்தியது.

வெளிநாட்டு விமான நிலையங்களில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பது, அவசரநிலை ஏற்பட்டால் மீட்பதற்கான ஏற்பாடுகளை செய்வது ஆகியவை குறித்து இதில் முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டது. ஈரான் தலைநகர் டெஹ்ரான், இஸ்ரேலின் டெல் அவிவ், அபுதாபி, துபாய் ஆகிய இடங்களில் 24 மணி நேர உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை தூதரக அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் படிக்கும் இந்திய மாணவர்களின் பாதுகாப்பு குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கடல்சார் வர்த்தக வழித்தடத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, வர்த்தக நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து கவலை தெரிவித்தார். இந்தியர்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிப்பது குறித்து வலியுறுத்திய மோடி, போர் நிறுத்தம் செய்து விரைவில் அமைதியை ஏற்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இதேபோல, ஐக்கிய அரபு அமீரகத் தலைவர் ஷேக் முகமது பின் ஜயீத்அல்நஹ்யானுடனும் பிரதமர் மோடி பேசினார். அந்நாட்டின் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பிரதமர் மோடி, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு துணை நிற்பதாகவும் தெரிவித்தார். அங்கு இந்தியர்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்தார். மத்திய கிழக்கில் அமைதி, நிலைத்தன்மை ஏற்பட இந்தியா ஆதரவு அளிப்பதாகவும் கூறினார்.

பஹ்ரைன் மன்னர் ஹமாத் பின் இஷா அல் கலிபாவிடம், தாக்குதல் குறித்த தனது கவலையை தெரிவித்த பிரதமர் மோடி, அங்கு உள்ள இந்திய மக்களின் பாதுகாப்புக்கு தேவையான உதவிகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.



# டில்லியில் அமித் ஷா – பழனிசாமி சந்திப்பு; மார்ச் 6இல் தொகுதிப் பங்கீடு அறிவிப்பு



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று டில்லி சென்று, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார். அப்போது கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீட்டை இறுதி செய்தனர் எனவும் இப்பட்டியலை எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி வெளியிட திட்டமிட்டுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தயார் நிலை குறித்து இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அரசியல் கட்சிகள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய நிலையில், விரைவில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் நபராக கடந்த ஆண்டே பிரசாரத்தைத் தொடங்கிய அ.தி.மு.க. பொதுச் செயலாளர், 3 கட்ட தேர்தல் வாக்குறுதிகளையும் வெளியிட்டுள்ளார். ஆனால், கூட்டணி முழு வடிவம் பெற்றுள்ள நிலையில் இன்னும் தொகுதிப் பங்கீட்டை தொடங்கவில்லை.

இதற்கிடையில், மதுரையில் கடந்த ஞாயிறு நடைபெற்ற தே.ஜ. கூட்டணிக் கூட்டத்தின் முடிவில், கூட்டணி தலைவர்கள் கூட்டம், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையில், பழனிசாமி முன்னிலையில் அன்று இரவு நடைபெற்றது. அதில் தொகுதி பங்கீடு தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தொகுதி பங்கீட்டை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் கலந்தாலோசித்து இறுதி செய்வதற்காக பழனிசாமி நேற்று காலை டில்லி புறப்பட்டு சென்றார்.

பின்னர் நேற்று இரவு அமித் ஷாவை சந்தித்து, எந்தெந்த கட்சிகளுக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்குவது, அ.தி.மு.க. சார்பில் மாநிலங்களவை எம்.பி. பதவி, ஜி.கே.வாசனுக்கா, அன்புமணிக்கா என்பது குறித்தும் விவாதித்தனர். பின்னர், தி.மு.க. அரசுக்கு ஆதரவாக செயல்படும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் பட்டியல் ஒன்றையும் அமித் ஷாவிடம் பழனிசாமி வழங்கினார் என்றும் இவர்களை தேர்தல் பணியில் ஈடுபடாத துறைக்கு இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்ததார் என்றும் கூறப்படுகிறது.

தொகுதி பங்கீடு தொடர்பாக இறுதி செய்யப்பட்ட பட்டியல் குறித்து, அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்களுடன் பழனிசாமி, நாளை மாலை சென்னையில் ஆலோசிக்க உள்ளார். அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி பட்டியல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காமேனி படுகொலையில் மோடி அரசின் மௌனம் பொறுப்பை துறக்கின்றமை என்கிறார் சோனியா



ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், மத்திய அரசு மௌனம் காப்பது நடுநிலை அல்ல என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில் மௌனம் என்பது பொறுப்பைத் துறப்பதற்குச் சமம் என்று விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் அவரது கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் சோனியா காந்தி குறிப்பிடுகையில்,

“அமெரிக்காவும் – இஸ்ரேலும் இணைந்து நடத்திய தாக்குதல்களில் ஈரான் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டமையை மார்ச் 1 அன்று ஈரான் உறுதிப்படுத்தியது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வந்த நிலையில், அதற்கு நடுவில் பதவியில் இருக்கும் ஒரு நாட்டின் தலைவரை கொல்வது சர்வதேச உறவுகளில் தீவிர சிக்கலை ஏற்படுத்தும்.

அதிர்ச்சிகரமான இந்த விவகாரத்தில் இந்தியா காக்கும் மௌனம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அந்த படுகொலையையும் ஈரானின் இறையாண்மை மீறலையும் இந்திய அரசு கண்டிக்காமல் தவிர்த்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தொடங்கிவைத்த தாக்குதல்களைப் பற்றி குறிப்பிடாமல், ஈரான் மேற்கொண்ட பதிலடி தாக்குதலை மட்டுமே பிரதமர் நரேந்திர மோடி கண்டித்துள்ளார். அதோடு, இந்த விவகாரம் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துவதாகவும், பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் பொதுவான கருத்துகளை மட்டுமே பிரதமர் மோடி வெளியிட்டார்.

ஒரு வெளிநாட்டு தலைவர் கொல்லப்பட்டமை குறித்து, இறையாண்மை அடிப்படையிலும், சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், அப்படி ஒரு தெளிவான நிலைப்பாடு இந்திய அரசிடம் இருந்து வெளிப்படவில்லை. இது நமது வெளிநாட்டுக் கொள்கையின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.

இந்தச் சூழலில் மவுனம் நடுநிலையல்ல. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, கொள்கை அளவிலான எதிர்ப்பை வெளிப்படுத்தாவிட்டால், சர்வதேச நெறிமுறைகள் சீரழிவதை அது எளிதாக்கும். சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில், மௌனம் என்பது பொறுப்பைத் துறப்பதாகும். இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.







# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்: ஒரே நாளில் 52 பேர் உயிரிழப்பு

## ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

ஹிஸ்புல்லாவின் தாக்குதலைத் தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் போரைத் தீவிரப்படுத்தியுள்ளது.

ஹிஸ்புல்லாவின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் நடத்திய பதில் தாக்குதலில் லெபனானில் குறைந்தது 52 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதியான தாஹியே மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் பல குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிப் பயணித்தனர்.

ஏற்கனவே தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு இஸ்ரேல் வெளியேற்ற எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, 2024 நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஹிஸ்புல்லாவை பயங்கரவாத அமைப்பாக லெபனான் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதனையடுத்து லெபனான் அரசாங்கம் ஹிஸ்புல்லாவின் இராணுவச் செயல்பாடுகளைச் சட்டவிரோதமானது என அறிவித்துள்ளதுடன், தாக்குதல்களை நடத்தியவர்களைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ளது.



## மத்திய கிழக்கில் உச்சக்கட்டப் போர்:

# தெஹ்ரான் - பெய்ரூட் மீது ஒரே நேரத்தில் வான்வழித் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல்

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் முன்னெப்போதும் இல்லாத வகையில் தீவிரமடைந்துள்ள நிலையில், ஈரானின் தலைநகர் தெஹ்ரான் மற்றும் லெபனான் தலைநகர் பெய்ரூட் ஆகிய இரு நகரங்களிலும் உள்ள இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் ஒரே நேரத்தில் தாக்குதல்களைத் தொடுத்துள்ளது.

ஈரானிய ஆட்சியின் இராணுவ மையங்கள் மற்றும் உளவுத்துறை தலைமையகங்களை இலக்கு வைத்து இஸ்ரேலிய வான்படை துல்லியமான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

நகரின் பல பகுதிகளில் பலத்த வெடிச்சத்தம் கேட்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய நிலைகள் மற்றும் ஆயுதக் கிடங்குகளை இலக்கு வைத்து பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதிகளில் குண்டுவீச்சுகள் நடத்தப்படுகின்றன.

“ஈரானிய பயங்கரவாத ஆட்சி மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவ இலக்குகளுக்கு எதிராகத் துல்லியமான மற்றும் இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்களை எமது வான்படை முன்னெடுத்துள்ளது” என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

பெய்ரூட்டின் தெற்குப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேலிய இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ள தாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.









# ரியாத்தில் அமெரிக்கத் தூதரகத்தை தாக்கிய ட்ரோன் வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர் தாக்குதல்

வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தொடர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், சவூதி அரேபியாவின் ரியாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது இரண்டு ட்ரோன்கள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியமை பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இஸ்ரேலும்அமெரிக்காவும்இணைந்து ஈரான் மீது கடந்த சனிக் கிழமை வான்வழி தாக்குதல் நடத்தின. இதில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உட்பட உயர்மட்டத் தலைவர்கள் பலர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, இஸ்ரேல் மட்டுமல்லாது அமெரிக்க இராணுவ தளங்கள் அமைந்துள்ள கட்டார் மற்றும் பஹ்ரைன் தலைநகரங்கள், ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் மீது ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதை அமெரிக்க வான் தடுப்பு அமைப்புகள் இடைமறித்து தாக்கி அழித்து வருகின்றன. இதனால், டுபாய், டோஹா, அபுதாபி மற்றும் மனாமா உள்ளிட்ட நகரங்களில் அவ்வப்போது வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டு இருக்கின்றன. ஈரானின் தாக்குதல் நேற்று மூன்றாவது நாளை எட்டியுள்ள நிலையில், இஸ்ரேலின் டெல் அவிவ் மற்றும் ஜெருசலம் பகுதிகளில் பல ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்பட்டன.

ஈராக்கில், எர்பில் விமான நிலையத்துக்கு அருகே 2 ட்ரோன்கள் வான் பாதுகாப்பு அமைப்புகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதை நேரில் பார்த்ததாக ஏ.எப்.பி புகைப்படக் கலைஞர் தெரிவித்துள்ளார். ஈரான் தாக்குதல் காரணமாக, வளைகுடா நாடுகளில் உள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள் முதல் குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. பஹ்ரைனின் மனாமாவில் உள்ள விமான நிலையத்தில் ட்ரோன்கள் தாக்கியதில் சிறிய அளவிலான சேதம் ஏற்பட்டது.

சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது இரண்டு ட்ரோன்கள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியது. இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நடந்த இந்த தாக்குதலை சவூதி பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து வளாகத்துக்குள் கரும்புகை சூழ்ந்ததோடு, கட்டடத்தின் சில பகுதிகள் தீயில் எரிந்தன. தூதரக வளாகத்தில் பரவிய தீ உடனடியாகக் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும், அதிர்ஷ்டவசமாக இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயங்களோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரியாத்தில் உள்ள இந்த அமெரிக்க தூதரகத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் பாதுகாப்பு கருதி ஏற்கெனவே அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஜோர்டானில் உள்ள அமெரிக்கத் தூதரகமும் அச்சுறுத்தல் காரணமாகத் தற்காலிகமாக மூடப்பட்டு, ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூதரகங்கள் மீதான தாக்குதலுக்கு விரைவில் பதிலடி வழங்கப்படும்



## ட்ரம்ப் எச்சரிக்கை

ரியாத் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீதான ஈரானின் தாக்குதல் மற்றும் அமெரிக்கப் படைவீரர்களின் உயிரிழப்புகளுக்கு அமெரிக்கா விரைவில் பதிலடி கொடுக்கும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுவரை 06 அமெரிக்க படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 18 பேர் காயமடைந்துள்ளனர் என்று நேற்று இரவு அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில். ஈரான் மீதான தாக்குதலுக்கு தரைப்படை வீரர்களை நேரடியாகக் களமிறக்குவது அவசியமாக இருக்காது என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 03

செவ்வாய்க்கிழமை 03/03/2026

## புளூவோட்டர் பிரிட்ஜ் எல்லையில் 100 கிலோ கொகேய்ன் பறிமுதல்



C2▶

# இந்திய அணுமின் உற்பத்திக்கு யுரேனியம் வழங்குகிறது கனடா

## ஒப்பந்தம் கையெழுத்து

இந்தியாவின் அணு மின்சார உற்பத்திக்கு யுரேனியம் வழங்க கனடா ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

கனடா பிரதமர் மார்க் கார்னி, பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா சென்றார். அவரது இந்த பயணத்தின் கடைசி நாளான நேற்று, C2▶



# இந்தியப் பிரதமர் மோடியுடன் பிரதமர் மார்க் கார்னி சந்திப்பு

## இரு நாட்டு ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடல்

கனடா பிரதமராக பொறுப்பேற்ற பின் முதன் முறையாக இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரதமர் மார்க் கார்னி இந்திய பிரதமர் மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கனடியப் பிரதமர் மார்க் கார்னியும் இருநாட்டு ஒத்துழைப்பையும் பங்காளித்துவத்தையும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

மோடியின் அழைப்பை ஏற்று கார்னி பிப்ரவரி 27ஆம் தேதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டார். அவர் டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் மோடியைச் சந்தித்தார்.

இந்திய- கனடா உத்திபூர்வப் பங்காளித்துவத்தின் கீழ் உள்ள பல்வேறு துறைகளில் கண்டுள்ள முன்னேற்றம் பற்றி மோடியும் கார்னியும் பேசினர்.

கடந்த ஆண்டு ஜீன் மாதம் கனானாஸ்கிஸில் C2▶



# உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

## மார்க் கார்னியுடன் இணைந்து மோடி வலியுறுத்தல்

மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்படுவதையே இந்தியா ஆதரித்து வந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கின் தற்போதைய நிலை கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டில்லியில், கனடா பிரதமர் மார்க் கார்னி உடன் இணைந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் தற்போது அதிகரித்து வரும் மோதல் குறித்த கேள்விக்கு C2▶

# புளூவோட்டர் பிரிட்ஸ் எல்லையில் 100 கிலோ கொகேய்ன் பறிமுதல்





ஒன்டாரியோ மாகாணத்தின் சார்னியாவில் அமைந்துள்ள புளூவோட்டர் பிரிட்ஸ் எல்லைச் சோதனை நிலையத்தில் நடத்தப்பட்ட பரிசோதனையின் போது, 100 கிலோ கிராமிற்கும் அதிகமான கோகெய்ன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கு நுழைந்த ஒரு வர்த்தக லொறி, எல்லை பாதுகாப்பு சேவை அதிகாரியால் இரண்டாம் நிலை சோதனைக்காக அனுப்பப்பட்டது.

லொறியின் ட்ரெய்லரை ஆய்வு செய்த போது, 111.4 கிலோ சந்தேகத்திற்கிடமான கோகெய்ன் கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதாக எல்லை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நோவா ஸ்கோஷியாவின் டார்த்மவுத் பகுதியைச் சேர்ந்த 29 வயது நபர் ஒருவரையும், ஒன்டாரியோவின் பெல்வில் பகுதியைச் சேர்ந்த 25 வயது நபர் ஒருவரையும் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இருவருக்கும் "கோகெய்ன் இறக்குமதி செய்தல்" மற்றும் "விற்பனை நோக்கில் கோகெய்ன் வைத்திருத்தல்" என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் ஜனவரி 1ஆம் திகதி முதல், தெற்கு ஒன்டாரியோ பிராந்தியத்தில் மட்டும் அமெரிக்காவிலிருந்து கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மொத்தம் 1,743 கிலோ கோகெய்ன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

---

**இந்தியப் பிரதமர்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஜி7 உச்சநிலை மாநாட்டிலும் நவம்பர் மாதம் ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெற்ற ஜி20 உச்சநிலை மாநாட்டிலும் இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்துக்கொண்டனர்.

அதையடுத்து இந்தியாவில் சந்தித்துக்கொள்ளும் அவர்கள், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, முக்கிய தாதுப் பொருள்கள், வேளாண்மை, கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கம், மக்கள் தொடர்பு போன்ற முக்கிய அம்சங்களில் தொடரும் ஒத்துழைப்புகள் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

மோடியும் கார்னியும் வட்டார ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உள்ள விவகாரங்கள் பற்றியும் கலந்துரையாடினர் என இந்திய வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

---

**உலகளாவிய...**

பதில் அளித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

"இத்தகைய பிரச்சினைகளுக்கு, பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தியா எப்போதும் வலியுறுத்தியுள்ளது. மோதல்களை அமைதியான முறையில் தீர்க்கும் நிலைப்பாட்டை இந்தியா நீண்ட காலமாக பின்பற்றி வருகிறது.

பயங்கரவாதம், தீவிரவாதம், தீவிர சிந்தனைகள் ஆகியவை நமக்கு மட்டுமல்லாது, உலகம் முழுவதற்கும் பெரிய சவால்களாக உள்ளன. இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளித்து உலக அமைதியையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்ய நாடுகளுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம்.

உலகம் முழுவதும் உருவாகும் பதற்றங்கள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் தெளிவாக இருந்துள்ளது. இந்தியா தொடர்ந்து அமைதி மற்றும் நிலைத்தன்மையை வலியுறுத்தி வருகிறது. இரண்டு ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அமைதிக்கான குரல் மேலும் வலிமை பெறும்." என தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் மோடி,

"பிராந்தியத்தில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருகிறது. அங்குள்ள நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது." என தெரிவித்துள்ளார்.

---

**இந்திய அணுமின்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மோடியை புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்தார்.

இதையடுத்து, அணு மின்சார உற்பத்திக்கான யுரேனியத்தை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவுக்கு கனடா யுரேனியத்தை வழங்கும். கனிம வளத் துறையில் ஒத்துழைப்பு உட்பட பல ஒப்பந்தங்களில் இரு தரப்பும் கையெழுத்திட்டன.

பின்னர் இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் பேசினர். அப்போது பிரதமர் நரேந்திர மோடி, "பிரதமர் மார்க் கார்னியை இந்தியாவில் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பிரதமராக இது அவரின் முதல் இந்தியப் பயணம். இதை நாங்கள் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதுகிறோம். கடந்த ஆண்டு கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில், அவர் என்னையும் எனது பிரதிநிதிகள் குழுவையும் அன்புடன் வரவேற்றார். இன்று அதே உளமார்ந்த நட்புடன் அவரை வரவேற்பது எனக்குப் பெருமை.

எங்கள் முதல் சந்திப்பிலிருந்தே, இருநாட்டு உறவுகளில் புதிய உற்சாகம், பரஸ்பர நம்பிக்கை மற்றும் நேர்மறை ஆற்றல் ஏற்பட்டுள்ளது. ஒத்துழைப்பு காரணமாக அனைத்து துறைகளிலும் அதிகரித்து வரும் முன்னேற்றத்துக்கான புகழை எனது நண்பர் பிரதமர் கார்னி அவர்களுக்கு அளிக்கிறேன்.

இந்தியாவும் கனடாவும் ஜனநாயக மதிப்புகளில் உறுதியான நம்பிக்கை கொண்டவை. மனிதகுல நலன் எங்கள் பொதுவான நோக்கம். இதுவே எங்களை ஒவ்வொரு துறையிலும் முன்னேற ஊக்குவிக்கிறது.

இன்று, இந்த நோக்கத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது குறித்து விவாதித்தோம். 2030 இற்குள் இருநாட்டு வர்த்தகத்தை 50 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்துவது எங்கள் இலக்கு. பொருளாதார ஒத்துழைப்பின் முழு திறனையும் வெளிக்கொணர வேண்டும் என்பதே எங்கள் முன்னுரிமை. இதற்காக விரைவில் Comprehensive Economic Partnership Agreement-ஐ இறுதி செய்ய முடிவு செய்துள்ளோம். இது முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்." என தெரிவித்தார்.

# ஈரானில் நடக்கும் போருக்கு இராஜதந்திர தீர்வு வேண்டும்

## கனடா வெளிவிவகார அமைச்சர் அனித ஆனந்த் தெரிவிப்பு



ஈரானில் நடைபெற்று வரும் போருக்கு இராணுவ தீர்வை விட ராஜதந்திர பேச்சுவார்த்தை மூலம் அமைதியான முடிவு கிடைக்க வேண்டும் என்று கனடா வெளிவிவகார அமைச்சர் அனித ஆனந்த் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு கனடா ஆதரவு தெரிவித்திருந்தாலும், போருக்கு முடிவாக பேச்சுவார்த்தை அவசியம் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் புது டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"ஜோர்டான், கட்டார், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அருபு இராச்சியம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும், ஜீ7 நாடுகளுடனும் நான் தொடர்ந்து தொடர்பில் உள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கனடா அமைதியான மற்றும் ராஜதந்திர தீர்வை விரும்புகிறது என்று அவர் கூறியுள்ளார்.

சில நாடுகள் தற்போதைய சூழ்நிலையில் இராஜதந்திர தீர்வு சாத்தியமில்லை எனக் கருதுகின்றன என்றும் மற்ற சில நாடுகள் விரைவில் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும் என விரும்புகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.



# சில சந்தர்ப்பங்களில் வட்டி வீதங்களை உயர்த்த வேண்டிய நிலை உருவாகலாம்

## கனடா மத்திய வங்கி அறிவிப்பு

சில சந்தர்ப்பங்களில் பொருளாதாரம் பலவீனமாக இருந்தாலும் வட்டி விகிதங்களை உயர்த்த வேண்டிய நிலை உருவாகலாம் என கனடிய மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு வர்த்தக கொள்கைகள், கனடா – அமெரிக்க வர்த்தக உறவில் ஏற்பட்ட பதற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி போன்றவை பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தி விநியோக அதிர்ச்சிகளுக்கு வழிவகுக்கலாம் என வங்கியின் துணை ஆளுநர் சாரோன் கோசிக்கி தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் பலவீனமாக இருக்கும் நேரங்களில் கூட நிதியியல் கொள்கையை கடுமையாக்க வேண்டியிருப்பது பலருக்கு ஆச்சரியமாக தோன்றலாம். ஆனால் சில நேரங்களில் இதுவே நாம் எதிர்கொள்ள வேண்டிய கடினமான நிலைமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரிய அளவில் அல்லது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விநியோக அதிர்ச்சிகள் பணவீக்கத்தை அதிகரிக்கக்கூடும். அத்தகைய சூழ்நிலையில் நிதியியல் கட்டுப்பாடுகள் தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தற்போதைய வங்கியின் கொள்கை முடிவெடுப்பில் நேரடியாக இடம்பெறவில்லை எனவும், தற்போதைய சர்வதேச இராணுவ பதற்றங்கள் குறித்து அவர் குறிப்பிடவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த நிதியியல் கொள்கை அறிவிப்பு மார்ச் 18 ஆம் திகதி வெளியிடப்பட உள்ளது.

அப்போது முக்கிய வட்டி விகிதம் 2.25 வீதமாக மாற்றமின்றி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பணவீக்கத்தை 2 வீத இலக்கிற்கு அருகில் வைத்திருக்க உதவும் என வங்கி கருதுகிறது.

அதேவேளை, விநியோக அதிர்ச்சிகள் பணவீக்கத்தில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தினாலும் பொருளாதார செயல்பாட்டை பாதித்தால், வட்டி விகிதத்தை உயர்த்துவதற்குப் பதிலாக அதை தளர்த்தும் வாய்ப்பும் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.